# ஒன்ராறியோவின் மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்கத் தயாராகவும்!

## உங்களது மாகாணப் பாராளுமன்றத்திற்கான உறுப்பினரைத் தெரிவுசெய்வதற்கு **பெப்ரவரி 27** அன்று அல்லது அதற்கு முன்பாக உங்களது X ஐக் (புள்ளடியை) குறிக்கவும்.

**<u>நீங்கள் வாக்களிக்கத் தகுதியுடையவரா?</u>**

ஒன்ராறியோத் தேர்தல் ஒன்றில் வாக்களிப்பதற்கு நீங்கள்:

- தேர்தல் தினத்தன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்;
- ஒரு கனேடியப் பிரஜையாக இருக்க வேண்டும்; மற்றும்
- ஒரு ஒன்ராறியோக் குடியிருப்பாளராக இருக்க வேண்டும்.

**<u>வாக்களிப்பதற்குப் பதிவுசெய்யவும்!</u>**

**பெப்ரவரி 17**க்கு முன்னராகப் பதிவேட்டில் உங்களது தகவலை உறுதிப்படுத்தவும், புதுப்பிக்கவும் அல்லது சேர்க்கவும். வாக்களிப்பதற்கு நீங்கள் பதிவு செய்திருந்தால், எப்போது மற்றும் எங்கே வாக்களிப்பது என்ற தகவலைக் கொண்ட வாக்காளர் தகவல் அட்டையைத் தபாலில் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

நீங்கள் இன்னமும் பதிவுசெய்யாவிட்டாலும், நீங்கள் வாக்களிக்க முடியும். நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது உங்களது தகவலைச் சேர்த்துக்கொள்ளவும்.

தகுதி மற்றும் பதிவுசெய்தல் தொடர்பான தகவலுக்கு **elections.on.ca**க்குச் செல்லவும்.

## <u>வாக்காளர் தகவல் அட்டை</u>

வாக்களிப்பதற்கு நீங்கள் பதிவு செய்திருந்தால், எப்போது மற்றும் எங்கே வாக்களிப்பது என்ற தகவலைக் கொண்ட வாக்காளர் தகவல் அட்டையைத் தபாலில் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

**நீங்கள் வாக்காளர் தகவல் அட்டையைப் பெறாவிட்டாலும் கூட நீங்கள் வாக்களிக்க முடியும்.** நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது உங்களது பெயர் மற்றும் தற்போதைய வீட்டு முகவரியைக் கொண்ட ஒரு அடையாள அட்டையைக் கொண்டுசெல்லவும்.

உங்களது தேர்தல் தொகுதிக்கான முழுமையான திகதி மற்று வாக்களிப்பு நிலையப் பட்டியலுக்கு, **voterinformationservice.elections.on.ca**க்குச் செல்லவும், அல்லது Elections Ontario செயலியைப் பதிவிறக்கம் செய்யவும்.

## <u>வாக்களிப்பதற்கான அடையாள அட்டை</u>

தபால் மூலமாக அல்லது Elections Ontario செயலியூடாக உங்களது வாக்காளர் தகவல் அட்டையை நீங்கள் பெற்றுக்கொண்டீர்களா?

- **<u>ஆம்</u>** - உங்களது வாக்காளர் தகவல் அட்டை மற்றும் உங்களது பெயரைக் கொண்ட ஒரு அடையாள அட்டையைக் கொண்டுவரவும் (உ.ம். பயன்பாட்டுப் பற்றுச்சீட்டு)
- **<u>இல்லை</u>** - உங்களது பெயர் மற்றும் வீட்டு முகவரியைக் கொண்ட ஒரு அடையாள அட்டையைக் கொண்டுவரவும் (உ.ம். ஒன்ராறியோ வாகனச் சாரதிப் பத்திரம்)

ஏற்றுக்கொள்ளப்படும் அடையாள அட்டைப் பட்டியலை **elections.on.ca/id-requirements**இல் காணவும்.

## <u>முன்கூட்டியே வாக்களிக்கவும்</u>

### தபால் மூலம்

- தபால் மூலம் வாக்களிக்க **votebymail.elections.on.ca**இல் விண்ணப்பிக்கவும்.
- உங்களது விண்ணப்பத்தை **பெப்ரவரி 21** பிப 6 மணிக்கு (கிழக்கு வலய நேரம்) முன்னராக ஒன்ராறியோத் தேர்தல் திணைக்களம் பெறவேண்டும்.
- வாக்கு எண்ணப்படுவதற்கு, உங்களது பூர்த்திசெய்யப்பட்ட வாக்களிப்புத் தொகுதியை **பெப்ரவரி 27** பிப 6 மணிக்கு (கிழக்கு வலய நேரம்) முன்னாராக ஒன்ராறியோத் தேர்தல் திணைக்களம் பெறவேண்டும்.

**உங்களது உள்ளூர்த் தேர்தல் அலுவலகத்தில்**

- **ஜனவரி 30** முதல் **பெப்ரவரி 26** பிப 6 மணி (கிழக்கு வலய நேரம்) வரை உங்களது உள்ளூர்த் தேர்தல் அலுவலகத்தில் நேரடியாக வாக்களிக்கவும்.

**முன்்கூட்டிய வாக்களிப்பின்போது**

- உங்களது தேர்தல் தொகுதியிலுள்ள எந்தவொரு முன்்கூட்டிய வாக்களிப்பு நிலையத்திலும் **பெப்ரவரி 20 முதல் 22 வரை** முப 10 மணி முதல் பிப 8 மணிவரை (கிழக்கு வலய நேரம்) வாக்களிக்கவும்.

## தேர்தல் தினத்தன்று வாக்களிக்கவும்

- **பெப்ரவரி 27** ஆம் திகதி முப 9 மணி முதல் பிப 9 மணி வரை (கிழக்கு வலய நேரம்) உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்கவும்.

உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தை உங்களது வாக்காளர் தகவல் அட்டை, Elections Ontario செயலி அல்லது **voterinformationservice.elections.on.ca** இல் காணவும்.

உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தை அணுக முடியாவிட்டால், தேர்தல் தினத்திற்கு முன்னராக உங்களது உள்ளூர்த் தேர்தல் அலுவலகத்தைத் தொடர்புகொண்டு, வேறொரு வாக்களிப்பு நிலையத்திற்கு மாற்றுமாறு கோரவும்.

## அணுகல்

**பெப்ரவரி 20 முதல் 22 வரை** நியமிக்கப்பட்ட பகுதிக்கான முன்கூட்டிய வாககுச்சாவடியில், **பெப்ரவரி 20** முதல் **26** வரை உங்கள் உள்ளூர்த் தேர்தல் அலுவலகத்தில் அல்லது தேர்தல் நாளில் முன்பதிவு மூலம் உதவி வாக்களிப்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம்.

அணுகலுக்கான கருவிகள் மற்றும் சேவைகள் பற்றிய முழுமையான பட்டியலுக்கு **elections.on.ca/accessible-voting**க்குச் செல்லவும் அல்லது 1.888.668.8683 அல்லது TTY 1.888.292.2312ஐ அழைக்கவும்.

கோரிக்கையின் பேரில் வாக்களிப்புப் பற்றிய தகவல்கள், மாற்று வடிவங்களில் கிடைக்கின்றன.

## எமக்காகப் பணிபுரியவும்

நீங்கள் 16 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர் என்றால், ஒரு தேர்தல் அதிகாரியாகப் பணிபுரிவதற்கு நீங்கள் விண்ணப்பிக்க முடியும். அனைத்துப் பணிகளுக்கும் ஊதியம் மற்றும் பயிற்சி வழங்கப்படும்.

**jobs.elections.on.ca**இல் விண்ணப்பிக்கவும்.

## எம்மைத் தொடர்புகொள்ளவும்

**உங்கள் நம்பகமான வளத்திலிருந்து உண்மைத் தகவலைப் பெறவும்.**

இணையத்தளம்: **elections.on.ca**
தொலைபேசி: **1.888.668.8683**
செவிப்புலனற்றோருக்கான இலக்கம் (TTY): **1.888.292.2312**
மின்னஞ்சல்: **info@elections.on.ca**

**@electionson**
**ElectionsON**
**@ElectionsON**

### Elections Ontario செயலி

தேர்தல் தொடர்பான முக்கிய தகவல், உங்களது வாக்காளர் தகவல் அட்டையின் டிஜிட்டல் பிரதி, வாக்களிப்பு நிலையங்களின் முழுமையான பட்டியல் மற்றும் பலவற்றிற்கு இந்தச் செயலியைத் தரவிறக்கம் செய்யவும்!